# உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை

## காவல் துறை மானியக் கோரிக்கை எண். 22

## தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை மானியக் கோரிக்கை எண். 23

அறிவிப்புகள்
2020–2021

**எடப்பாடி கே. பழனிசாமி**
முதலமைச்சர்

# தீயணைப்பு மற்றும்
# மீட்புப் பணிகள் துறை
## அறிவிப்புகள் 2020 – 2021
### மானியக் கோரிக்கை எண். 23

## 1. பணியாளர் நலன்

1. தீயணைப்புத்துறை பணியாளர்களுக்கு 15 மற்றும் 25 ஆண்டுகள் பணி முடித்தவுடன் அடுத்த பதவிக்கு தரம் உயர்த்துதல்.

2. சிறைத்துறை சீர்திருத்தம் மற்றும் தமிழ்நாடு தீயணைப்பு மீட்புப் பணிகள் துறையினருக்கான பணி நிபந்தனைகள், கடமைகள் மற்றும் பொறுப்புகள், நவீனமாக்குதல் குறித்து அரசால் ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ள நான்காவது காவல் ஆணையத்தால் பரிசீலனை செய்யப்படும்.

3. மெரினா மீட்பு நிலையத்தில் 17 தீயணைப்போர் உயிர் காப்பாளர்களுக்கு இடர்பாட்டுப்படி ஒரு மாதத்திற்கு ரூ.6000 என உயர்த்தப்படும். இதனால் அரசுக்கு ஆண்டொண்டிற்கு ரூ.12.24 இலட்சம் செலவாகும்.

4. 39 மாவட்டத் தலைமையக தீயணைப்பு மற்றும் மீட்பு நிலையங்களுக்கு உதவி மாவட்ட அலுவலர் அந்தஸ்தில் முதன்மை நிலைய அலுவலர் பதவிகள் ரூ.3.98 கோடி செலவில் புதிதாக உருவாக்குதல்.

5. பணியின்போது மரணமடையும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணியாளர்களின் வாரிசுதாரர்கள் அல்லது காயமடையும் பணியாளர்களுக்கு வழங்கப்படும் கருணைத்தொகை கீழ்க்கண்டவாறு உயர்த்தி வழங்குதல்.

| வ.எண் | உதவித் தொகை விவரம் | தற்போது வழங்கப்படும் தொகை | உயர்த்தி வழங்கப்படும் தொகை |
|---|---|---|---|
| 1. | பணியாற்றும் போது உயிரிழப்பு | ரூ.10 இலட்சம் | ரூ.15 இலட்சம் |
| 2. | நிரந்தர ஊனம் | ரூ.4 இலட்சம் | ரூ.8 இலட்சம் |
| 3. | 20 சதவிகிதத்திற்கும் மேற்பட்ட காயம் அல்லது பிற காயங்கள் | ரூ.2 இலட்சம் | ரூ.4 இலட்சம் |
| 4 | 20 சதவிகிதத்திற்கும் குறைவான காயம் அல்லது பிற காயங்கள் | ரூ.1 இலட்சம் | ரூ.3 இலட்சம் |
| 5. | சாதாரண காயங்கள் | ரூ.10,000 | ரூ.20,000 |



## 2. புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்களுக்கான கட்டடம் கட்டுதல் (Construction of New Buildings)

(I) கீழ்க்கண்ட 10 இடங்களில் உள்ள தீயணைப்பு மீட்புப் பணி நிலையக் கட்டடங்கள் ரூ.2316.28 இலட்சம் செலவில் கட்டப்படும்.

1. திருநெல்வேலி மாவட்டம், சங்கரன் கோவில் தீயணைப்பு நிலையம் ரூ.99.44 இலட்சம் செலவில் கட்டப்படும்.
2. தென்சென்னை மாவட்டம், கிண்டி தீயணைப்பு நிலையம் ரூ.350.00 இலட்சம் செலவில் கட்டப்படும்.
3. தூத்துக்குடி மாவட்டம், தூத்துக்குடி தீயணைப்பு நிலையம் ரூ.306.51 இலட்சம் செலவில் கட்டப்படும்.
4. மதுரை மாவட்டம், கள்ளிக்குடி தீயணைப்பு நிலையம் ரூ.170.61 இலட்சம் செலவில் கட்டப்படும்.
5. கரூர் மாவட்டம், அரவக்குறிச்சி தீயணைப்பு நிலையம் ரூ.121.55 இலட்சம் செலவில் கட்டப்படும்.
6. கடலூர் மாவட்டம், அலுவலகம் மற்றும் கடலூர் தீயணைப்பு நிலையம் ரூ.494.12 இலட்சம் செலவில் கட்டப்படும்.
7. தஞ்சாவூர் மாவட்டம், திருக்காட்டுப்பள்ளி தீயணைப்பு நிலையம் ரூ.263.00 இலட்சம் செலவில் கட்டப்படும்.

8. நாமக்கல் மாவட்டம், கொல்லிமலை தீயணைப்பு நிலையம் ரூ.198.00 இலட்சம் செலவில் கட்டப்படும்.

9. வேலூர் மாவட்டம், இராணிப்பேட்டை தீயணைப்பு நிலையம் ரூ.163.00 இலட்சம் செலவில் கட்டப்படும்.

10. வேலூர் மாவட்டம், ஒடுக்கத்தூர் தீயணைப்பு நிலையம் ரூ.150.05 இலட்சம் செலவில் கட்டப்படும்.

(II) 1. திருவண்ணாமலை மாவட்டம் சேத்துப்பட்டு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்கு ரூ.276.86 இலட்சம் செலவில் கட்டடம் மற்றும் குடியிருப்பு கட்டுதல்.

2. பூம்புகாரில் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்கு புதிய கட்டடம் மற்றும் அலுவலர்களுக்கான குடியிருப்பு ரூ.300 இலட்சம் செலவில் கட்டுதல்.



## 3. புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்கள் அமைத்தல்

புதியதாக 11 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்கள் மற்றும் ஒரு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையத்தின் நிலையினை உயர்த்துதல். இவற்றிற்கான தொடர் செலவினம் ரூ.840.00 இலட்சம், தொடராச் செலவினம் ரூ.600.00 இலட்சம் செலவில் கீழ்க்கண்ட இடங்களில் திறக்கப்படும்

1. ஆட்டையாம்பட்டி, சேலம் மாவட்டம்
2. திங்கள் நகர், கன்னியாகுமரி மாவட்டம்
3. ஊத்துக்குளி, திருப்பூர் மாவட்டம்
4. இளையான்குடி, சிவகங்கை மாவட்டம்
5. கோவைப்புதூர், கோயம்புத்தூர் மாவட்டம்
6. சின்னமனூர், தேனி மாவட்டம்
7. வையம்பட்டி, திருச்சிராப்பள்ளி மாவட்டம்
8. குமராட்சி, கடலூர் மாவட்டம்
9. வாய்மேடு, நாகப்பட்டினம் மாவட்டம்
10. தெள்ளார், திருவண்ணாமலை மாவட்டம்
11. நயினார்பாளையம், கள்ளக்குறிச்சி மாவட்டம்.

சிவகாசி, விருதுநகர் மாவட்டம் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையத்தின் நிலையினை உயர்த்துதல்.

## 4. புதிய ஊர்திகள்

1. திருச்சி மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களுக்கு 54 மீட்டர் கொண்ட இரண்டு வான்நோக்கி உயரும் ஊர்திகள் தலா ரூ.15 கோடி செலவில் கொள்முதல் செய்யப்படும். (15x2 = ரூ.30 கோடி)

2. திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையத்தில் உள்ள தீயணைப்பு ஊர்தி மிகவும் பழுதடைந்துள்ளதால் ரூ.42 லட்சம் செலவில் புதிய ஊர்தி வழங்கப்படும்.

3. தீயணைப்பு வீரர்களின் வீரவணக்க நினைவுச் சின்னம் தலைமையகத்தில் ரூ.25.00 இலட்சம் செலவில் அமைக்கப்படும்.

4. தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் மாணவ மாணவிகள் படை சென்னை, கோயம்புத்தூர், சேலம், திருப்பூர், மதுரை, திருநெல்வேலி மற்றும் திருச்சி போன்ற நகரங்களில் (ஒரு இலட்சம் மாணவ, மாணவிகள்) ரூ.2 கோடி செலவில் உருவாக்குதல். சின்னம் மற்றும் தொப்பி அரசு செலவினத்தில் வழங்கப்படும்.

**எடப்பாடி கே. பழனிசாமி**
முதலமைச்சர்